செ.வெ.எண்: 1159 நாள்: 31/12/10

# அரசு பத்திரிக்கைச் செய்தி

## ரூ.1.00 கோடி செலவில் தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி வட்டம், ஆவிடையாணி கோட்டை கிராமத்தில் முடியனாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் திட்டம்

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், ஆவிடையாணி கோட்டை கிராமத்தில் முடியனாற்றின் குறுக்கே நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைத்து புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்திலுள்ள அத்தாணி ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தினால் முடியனாற்றிலிருந்து அத்தாணி ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்வதற்காக வருடாவருடம் அமைக்கப்படும் மணற்கொரம்பு உறுதியான நிரந்தரமான அணைக்கட்டாக மாறும். இத்திட்டத்தின் பயனாக 238 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்று, அதன் வாயிலாக 1914 மெட்ரிக் டன் உணவு உற்பத்தி கிடைக்கும்.

கி.தனவேல்
அரசுச் செயலாளர்

// உண்மை நகல் //

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

பிரிவு அலுவலர்